**தலைப்பு 166 – நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 166 – நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 21 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 39,335.87 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 30,291.07 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 9,044.80 மில்லியன் அதாவது 22.99 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 213.13 | 210.87 | 2.26 | 1.06 |
| மூலதனம் | 39,122.74 | 30,080.20 | 9,042.54 | 23.11 |
| மொத்தம் | **39,335.87** | **30,291.07** | **9,044.80** | **22.99** |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சிற்குரிய 16601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 6.14 | 3.80 | 2.94 | 4.89 | 27.00 | 11.52 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் கீழான 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 7002/0000/00/0399/0015/000 ஆம் கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 87.35 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் கீழான 05 பொது வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 18.98 மில்லியன் கூட்டுமொத்தமாக இருந்தது.

| கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0146/000 | 0.10 |
| 6000/0000/00/0013/0101/000 | 2.65 |
| 6000/0000/00/0016/0092/000 | 15.84 |
| 6000/0000/00/0018/0096/000 | 0.39 |
| மொத்தம் | 18.98 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சினால் பதிவேடுகளை பேணுவது தொடர்பாக மேற்கெள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது நிதிப் பிரமாணம் 451 இன் பிரகாரம் காசோலைகள் பதிவேடு பேணப்படாதிருந்ததுடன் நிதிப் பிரமாணம் 845 இன் பிரகாரம் தொலைபேசி பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 11 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 504.61 மில்லியனான மொத்த தேறிய நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 22 செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாக நிதிஏற்பாடுகளைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அவ்விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாடுகளில் 21 சதவீதத்திலிருந்து 97 சதவீதம் வரையான வீச்சளவினைக் கொண்டிருந்தது.

### 3.2.2 ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் செயற்திட்ட நிதிக்கூற்றுக்களுக்கிடையே வேறுபாடு

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு செயற்திட்டங்களுக்குரிய ஒதுக்கீட்டுக் கணக்கில் இரண்டு செயற்திட்ட நிதிக்கூற்றுக்களுக்குரிய செலவினம் தொடர்பாக பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | செயற்திட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவினம் (வெளிநாட்டுக் கடன்) | ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் செலவினம் |
|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| நீர்ப் பிரிவு அபிவிருத்தி 11 செயற்திட்டம் | 2,577.34 | 3,206 |
| அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் - 1 ஆம் கட்டம் | 94.05 | 172.4 |

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

16601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 2013 யூன் 07 ஆந் திகதி சேவையிலிருந்து நீக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரின் நிலுவைக் கடன் மீதி ரூபா 38,095 தொகை தீர்த்துவைக்கப்படாமல் தொடர்ச்சியாக முன்கொண்டு வரப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

பாரிய கொழும்பு நீர் புனரமைப்பு செயற்திட்டத்தின் கீழான பாதுகாப்பு வைப்பு ரூபா 12.75 மில்லியன், செயற்திட்டம் நிறைவுபெற்றவுடன் 2014 ஆம் ஆண்டில் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அப்பணம் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.5.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வறிக்கை 2016 யூலை 31 ஆந் திகதி வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பான மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

---

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2016 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இலங்கை அமைச்சினால் அவ்வறிக்கை 2016 யூலை 08 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கொழும்பு தலைநகரை அண்மித்து நகர அபிவிருத்தி செயற்திட்டங்களுக்குச் சொந்தமான 02 வாகனங்களும், அரச பாதுகாப்பு அமைச்சிற்குச் சொந்தமான 02 வாகனங்களும் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சினால் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ii) தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாமைப்பு சபைக்குச் சொந்தமான 03 வாகனங்களைப் பயன்படுத்துவதாக அமைச்சினால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், சபைக்குச் சொந்தமான 09 வாகனங்கள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருப்பதாக சபையினால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்து. சபையினால் அவ்வாகனங்களுக்காக 2015 ஆம் ஆண்டின் போது வருமான அனுமதிப்பத்திரங்கள், காப்புறுதி மற்றும் திருத்தங்கள் போன்ற செலவினங்களுக்காக ரூபா 421,459 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**(இ) ஏனைய தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொண்ட மனித வளங்கள்**

---

அமைச்சினால் ஏனைய தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொண்ட மனித வளங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **ஊழியர்களின் வகை** | **ஊழியர் எண்ணிக்கை** | **ஏனைய தரப்பினர்** | **காலப்பகுதி** |
|---|---|---|---|
| ஆரம்ப நிலை | 24 | தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபை | 2008 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை |
| இரண்டாம் நிலை | 10 | தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபை | 1995 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை |
| மூன்றாம் நிலை | 02 | தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபை | 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை |
| **மொத்தம்** | 36 | | |

மேலே காட்டப்பட்ட 36 ஊழியர்களுக்குரிய சம்பளம் மற்றும் வேதனங்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாமைப்பு சபையால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அச்செலவினங்கள் அமைச்சினால் சபைக்கு மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | |
| | (i) நிதிப் பிரமாணம் 571 | 11,100 | மழை நீர்த் தாங்கி நிர்மாணிப்பதற்குரிய நிறுத்தி வைக்கப்பட்ட பணம் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |
| | (ii) நிதிப் பிரமாணம் 1646 | - | வாகனங்களிற்குப் பொறுப்பான உத்தியோகத்தரால் அமைச்சின் குழாம் வாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்டப் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பறிக்கைகள் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதி முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை |
| (ஆ) | **பொது நிர்வாக சுற்றறிக்கை** | | |
| | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | அமைச்சிற்குரிய வாகனங்களின் எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனை 06 மாதங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

### 3.8 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டம்

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டு நிதியீட்டத்தின் கீழ் 13 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் அச்செயற்திட்டங்களுக்கான தேறிய நிதிஏற்பாடு ரூபா 10,300.42 மில்லியனாக இருந்ததுடன், அச்செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 3,062.42 மில்லியன்

பயன்படுத்தப்பட்டிருந்தது. இச்செயற்திட்டங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் செயலாற்றல்**

கீழே விபரிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிச் செயலாற்றல் மற்றும் பௌதீக செயலாற்றல் பின்வருமாறு

| | செயற்திட்டங்கள் | செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட திகதி | நிதிச் செயலாற்றல் சதவீதம் | பௌதீக செயலாற்றல் சதவீதம் |
|---|---|---|---|---|
| (i) | யாழ்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகநலன் செயற்திட்டம். | 2016.06.30 | 8.70 | 38.98 |
| (ii) | உலர் வலய நகர நீர் மற்றும் சுகநலன் செயற்திட்டம் | 2016.06.30 | 54.00 | 76.00 |
| (iii) | பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ மேம்படுத்தல் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 01 | 2016.12.31 | 21.68 | 6.45 |
| (iv) | பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ மேம்படுத்தல் முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - செயற்திட்டம் 02 | 2019.12.31 | 0.04 | 1.51 |

**(ஆ) வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட சில நிர்மாண வேலைகள் கைவிடப்பட்டிருந்தமை**

யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகநலன் செயற்திட்டத்திற்குரிய இரன்னமடு நீர்த்தேக்கத்திற்கு புதிய நீர் பெற்றுக்கொள்ளும் இடத்தை நிர்மாணித்தல், சுத்திகரிக்கப்படாத நீரை எடுத்துச் செல்வதற்காக கோபுர வீதியொன்றை நிர்மாணித்தல், நீர் சுத்திகரிப்பு ஆலையை நிர்மாணித்தல், சுத்திகரிக்கப்பட்ட நீரை எடுத்துச் செல்வதற்காக கோபுர வீதியொன்றை நிர்மாணித்தல் போன்ற செயற்பாடுகளுக்காக பிரான்ஸ் அபிவிருத்தி முகவராண்மையிடமிருந்து கடன் வசதிகளை பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. நீரை விநியோகிப்பது தொடர்பாக எழுந்த சிக்கல்கள் காரணமாக இரனணமடு நீர்த்தேக்கத்திலிருந்து நீரைப் பெற்றுக்கொள்ளும் மாற்று

வழியை கைவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டமையால் பிரான்ஸ் அபிவிருத்தி முகவராண்மையின் (AFD) கடன் தொகையிலிருந்து 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 124.64 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இலங்கை அரசின் பங்களிப்பின் பேரில் மேலதிகமாக செலவிடப்பட்ட ரூபா 27.11 மில்லியன் கூட்டுத்தொகையும், தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாமைப்பு சபைக்கோ அல்லது தேசிய பொருளாதாரத்திற்கோ பயன் ஒன்றை வழங்கியிருக்கவில்லை.

**(இ) நிறுத்தி வைக்கப்பட்ட செயற்திட்ட பணம்**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் வட்டி கொடுப்பனவு அடிப்படையில் பெற்றுக் கொண்ட கடன் தொகையை, செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பயன்படுத்தப்படாமையால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகநலன் செயற்திட்டம் மற்றும் அநராதபுரம் வடக்கு குடிநீர் வழங்கல் செயற்திட்ட முறைமையின் கீழ் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை முறையே ரூபா 76 மில்லியன் மற்றும் ரூபா 13 மில்லியன் என கடப்பாட்டுக் கட்டணங்கள் (Commitment Charges) கொடுப்பனவு செய்ய நேர்ந்திருந்தன.

**3.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சின் மின்சாரக் கட்டணத்தை உரிய திகதிக்கு முன்னர் கொடுப்பனவு செய்யாமையால் ரூபா 18,071 தாமதக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது.

**3.10 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 27 | 20 | 07 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | - | 05 |
| (iii) | இரண்டாம் நிலை | 81 | 53 | 28 |
| (iv) | ஆரம்ப நிலை | 40 | 36 | 04 |
| | **மொத்தம்** | **153** | **109** | **44** |